### *ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுுல்லாஹுுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 29.02.2008 அன்று ஆற்றிய ஜுுமுஆ பேருரை*

இன்றைய நாட்களில் மீண்டும் இஸ்லாத்தின் மீது வெளிப்படையாக தாக்குதல் நடத்தப்பட்டு வருவது நமக்குத் தெரியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. திருக்குர்ஆனின் போதனைகள்மீதும் தாக்குதல் நடத்தப்பட்ட வருகிறது. இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தவே முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்குக் காரணம் இஸ்லாம் எப்படிப்பட்ட மார்க்கம் என்றால் அதனால்தான் காலத்தின் தேவைகளை நிறைவேற்ற முடியும். திருக்குர்ஆனின் போதனைகளைப் பார்த்து மக்களின் கவனம் திருக்குர்ஆனின் பக்கம் திரும்பிக் கொண்டிருக்கிறது. சில முஸ்லிம்களின் செயல்களைக் கண்டு வெறுப்பு நிலவுவது ஒரு தனிப்பட்ட விஷயமாகும். ஆனால் இஸ்லாத்திற்கு எதிராக செய்யப்பட்டுள்ள முயற்சிகள் மார்க்கத்தில் ஆர்வமுள்ளவர்களை இஸ்லாத்தின் போதனைகளைப் பார்ப்பதற்கும் அதைப் புரிவதற்கும் தூண்டியிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் திருக்குர்ஆனைப் படித்து அதைப் புரிவதற்கு முயற்சி செய்துள்ளனர்.

எவர்களுக்கு மார்க்கத்தில் ஆர்வம் இருக்கின்றதோ அவர்கள் எவருடனும் சார்ந்திராமல் திருக்குர்ஆனைப் படித்து அதனை சிந்தனை செய்துள்ளார்கள். திருக்குர்ஆனின் மொழியாக்கத்தை படிப்பதால் மட்டும் அதிலுள்ள ஆழமான விஷயங்கள் பற்றிய அறிவு ஒருவருக்கு கிடைக்க முடியாது என்றாலும், அவ்வாறே திருக்குர்ஆனிலுள்ள தூதுச் செய்தியை அவரால் புரிய முடியவில்லை என்றாலும் சில நல்லியல்புள்ள மக்கள் இவ்விஷயத்தில் அதிகம் முயற்சி செய்து திருக்குர்ஆனிலுள்ள உண்மைகளைப் புரிந்து கொள்கின்றார்கள். கடந்த சில நாட்களுக்கு முன் பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்திருக்கின்றது. அதிலுள்ள செய்தி என்னவென்றால் ருட்லீ என்ற பெயருடைய ஒரு பெண் பத்திரிகையாளர் தனது இந்த வேலை தொடர்பாக ஆஃப்கானிஸ்தான் சென்றார். அங்கு பெண்கள் செல்வதற்கு அனுமதியில்லையென்றாலும் இந்த பெண் தனது உருவத்தை மாற்றிக் கொண்டு புர்கா அணிந்து அங்கே சென்றுள்ளார். சிறிது காலம் கழிந்ததும் அவர் அங்கு பிடிபட்டுவிட்டார். சிறையில் அடைக்கப்பட்டார். இறுதியில் திருக்குர்ஆனை நான் படிப்பேன் என்ற வாக்குறுதியின் அடிப்படையில் அவர் விடுதலை செய்யப்பட்டார். பிறகு அங்கிருந்து அவர் திரும்பவும் இங்கு வந்தார். திருக்குர்ஆனை நான் படிப்பேன் என்று அவர் செய்திருந்த வாக்குறுதியை அவர் மறந்து விட்டார். இங்கு வந்ததும் இஸ்லாத்திற்கு எதிரான மற்றவர்களின் நடவடிக்கையால் அவருக்கு தாலிபான் அமைப்பிடம் தான் செய்த வாக்குறுதி நினைவுக்கு வந்தது. அதாவது திருக்குர்ஆனை நான் படிப்பேன் என்று அவர் செய்த வாக்குறுதி நினைவுக்கு வந்ததும் அவர் திருக்குர்ஆனை வாங்கினார். அதைப் படித்தார். பெண்களுடன் எவ்வாறு பரிமாற வேண்டும் என்பதைப் பற்றி திருக்குர்ஆன் கூறியுள்ள போதனைகளைப் படித்த அவருக்கு தாலிபான் அல்லது இஸ்லாத்தைத் தாங்கள் மிகவும் விரும்புவதாக வெளிப்படுத்திக் காட்டுபவர்கள் பெண்களுடன் பரிமாறும் விதத்தை பார்த்த பிறகு இவ்விரண்டிற்கும் இடையே பெரிய வித்தியாசம் இருப்பதை அறிந்து அவர் மிகவும் வியப்படைந்தார். எவ்வாறிருப்பினும், திருக்குர்ஆனைப் படித்த பிறகு இஸ்லாத்தின் போதனைகளை அறிந்து அவர் இஸ்லாத்தில் இணைந்து முஸ்லிமாகி விட்டார்.

அவர் இஸ்லாத்தில் இணைந்ததற்கு முஸ்லிமல்லாத நாடுகள் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்பு நிலவியதால் இஸ்லாமிய நாடான கத்தரிலுள்ள ஒரு செல்வந்தர் அங்குள்ள மீடியா ஒன்றில் அவரை வேலைக்குச் சேர்த்துக் கொண்டார். இந்தப் பெண்ணோ ஐரோப்பாவில் படித்து வளர்ந்தவர். உலக அறிவும் அவருக்கு இருந்தது. அவர் தமது Journalism (பத்திரிகைத் துறை) -யில் உண்மையை உண்மை என்று கூறும் நடைமுறையை கடைபிடித்து வந்தார். அதன் மூலம் உண்மையை

வெளிப்படுத்த அவர் விரும்பினார். எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் அவருக்கு எதிராக உண்மையைக் கூறுவதிலிருந்தும் விலகாமல் அதில் மிகவும் உறுதியாக இருந்து வந்தார். இதன் காரணமாக இவர் வேலை செய்த துறையின் எஜமானருக்கும் இவருக்குமிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதன் காரணமாக இவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். ஆனால், அவர் மீண்டும் இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதன் உரிமையைப் பெற அவர் போராடினார். பெண்களுக்கு இந்தந்த உரிமைகள் இருப்பதால் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்று இவர் கூறினார். இறுதியில் அவர் வழக்கில் வெற்றி பெற்றார்.

பிறகு இன்னொரு இடத்தில் அவர் வேலைக்கு அமர்த்தப்பட்டார். அங்கும் இதே காரணத்திற்காக அவர் வேலையிலிருந்து அகற்றப்பட்டார். அதை எதிர்த்தும் அவர் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கிலும் வெற்றி பெற்றார். முஸ்லிம் பெண்களுக்கு உள்ள உரிமையை முஸ்லிம் அரசாங்கங்கள் நிறைவேற்ற வேண்டும் என்ற விஷயத்தை அவர் ஆணித்தரமாகக் கூறி வந்தார். அதற்காக தொடர்ந்து முயற்சி செய்து வந்தார். தொடர்ந்து வழக்குகளிலும் அவருக்கு வெற்றி கிடைத்ததால் அவரது ஈமானிலும் மேலும் வலிமை ஏற்பட்டது.

நான் இவற்றைக் கூறுவதன் நோக்கம் என்னவென்றால், திருக்குர்ஆனின் போதனைகளைப் படித்ததன் காரணமாகத்தான் அந்தப் பெண்ணின் ஈமான் வலுவடைந்தது. பல அனுபவங்களை அவர் பெற்ற பிறகும் கூட முஸ்லிம்கள் தரப்பிலிருந்தும் அவருக்கு எதிர்ப்பு இருந்தும் கூட ஒருபோதும் திருக்குர்ஆனின் போதனைகளை தீயதென்று அவர் கூறவில்லை. இந்த போதனைகளுக்கு எதிராக செயல்படும் அந்த மக்களை எதிர்த்துதான் அவர் ஜிஹாது செய்தார். இஸ்லாத்தை எதிர்ப்பவர்களிடம் இப்படிப்பட்ட நல்லுதாரணங்கள் கூறப்படும்போது அதனால் அவர்களுக்கு கவலை ஏற்படுகின்றது. தங்களது மார்க்கத்துடன் அவர்களுக்கு தொடர்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் இஸ்லாத்தின் மீதுள்ள பகைமை மிகவும் கீழ்த்தரமான செயல்களைச் செய்ய அவர்களைத் தூண்டுகின்றது. இது புதிய ஒரு விஷயமல்ல. நபிமார்கள் நிறுவுகின்ற ஜமாஅத்துகளுடன் எப்போதும் இவ்வாறே நடந்திருக்கின்றது. இஸ்லாம் உலகளாவிய மார்க்கமாக இருப்பதால் எல்லா வற்றையும் விட அதிகமாக இஸ்லாத்துடன் இவ்வாறு நடந்து கொள்ளப்படுகிறது.

மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒரு சில நபர்கள் இருந்த சமயத்தில் காஃபிர்கள் அவர்களை எள்ளி நகையாடியானார்கள். பிறகு, திருக்குர்ஆனின் போதனைகள் அங்குள்ள தூய்மையான ஆன்மாக்களை தன் பக்கம் ஈர்த்த போது பிறகு அதனால் அந்தக் காஃபிர்களுக்கு கவலை ஏற்பட்டது. அதனால் எதிர்ப்பு ஆரம்பமானது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொல்வதற்காக வந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனின் ஒரேயொரு வசனத்தைக் கேட்டு விட்டு எந்த அளவு சிறந்த தாக்கத்திற்கு ஆளானார்கள் என்றால் அவர்கள் முஸ்லிமாகி விட்டார்கள். நேர்வழி பெற்ற கலீஃபாக்களில் இரண்டாவது கலீஃபாவாக அவர்கள் இருந்தார்கள். அந்த அளவு அல்லாஹ் அவர்களது தகுதியை உயர்த்தி விட்டான். இந்த விஷயங்களைப் பார்த்த பிறகு காஃபிர்களின் எதிர்ப்பும் அதிகமானது. ஏனென்றால், சிறிது காலம் கழிந்ததும் இவர்கள் நமது நகரத்தை தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து விடுவார்கள் என்று அவர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள். மக்கா நகரத்தின் காரணமாக தங்களுக்கு இருந்த தனித்தன்மை இனி முடிவுக்கு வந்து விடும். மேலும் முஸ்லிம்கள் நமது சந்ததிகளையும் தங்களுடன் இணைத்துக் கொள்வார்கள் என்று அவர்கள் கருதினார்கள். இஸ்லாத்தின் தூதுச் செய்தி மேலும் பரவிக் கொண்டேயிருந்தது. இதன் காரணமாக எதிர்ப்பும் அச்சத்தின் நிலைமையும் தொடர்ந்து இருந்து வந்தது. அதன் காரணமாக முஸ்லிம்களுக்கு மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா சென்றார்கள். அங்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தி பரவியது. இவ்வாறு இஸ்லாம் வளர்ச்சியடைந்து வந்ததால் ஒரு

காலத்தில் கெய்சர், கிஸ்ரா போன்ற பெரும் பெரும் அரசாங்கங்கள் கூட அதன் வளர்ச்சியைக் கண்டு கவலையடைந்தன. அந்த அரசாங்கங்களும் இஸ்லாத்திற்கு எதிராக அணிவகுத்து நின்றன.

இன்றோ உலகிலுள்ள எல்லா மதங்களிலுள்ள பெருந்தலைவர்கள் இஸ்லாம் வெற்றி பெற்று எல்லாரையும் மிகைத்து நின்றுவிடக் கூடாதே என்று அச்சத்தின் காரணமாக இஸ்லாத்திற்கு எதிராக எப்படிப்பட்ட இழிவான திட்டங்களைத் தீட்டி செயல்படுகின்றனர் என்றால், இவர்களுக்குக் கீழ் இருக்கின்ற இவர்களைச் சார்ந்திருக்கும் நல்ல இயல்பு கொண்டுள்ள மக்கள் கூட இவர்களது தீய இழிவான திட்டங்களுக்கு எதிராக குரல் எழுப்ப ஆரம்பித்துள்ளார்கள். இஸ்லாத்திற்கு எதிராக ஐரோப்பாவில் எழுந்துள்ள குரல்களை ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு நபரது குரலாகவும் நாம் கருத முடியாது. ஐரோப்பாவைச் சார்ந்த அனைவரும் இஸ்லாத்திற்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால், முஸ்லிம்களின் எதிர் நடவடிக்கை தான் மிகவும் கடினமானதாக இருக்கின்றது. இவர்களிலும் அதிகமான எண்ணிக்கையில் இப்படிப்பட்ட இழிவான செயல்களை விரும்பாதவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

உதாரணமாக, கடந்த சில நாட்களுக்கு முன்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் நடத்தும் விதத்தில் நடந்த சம்பவங்களுக்கு எதிராக டென்மார்க்கிலேயே முஸ்லிம் அல்லாதவர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பியுள்ளனர். நல்லொழுக்கத்திற்கு மாற்றமான மிகவும் கீழ்த்தரமான செயல்கள் செய்யப் பட்டிருப்பதை அவர்கள் கண்டித்துள்ளார்கள். நான் கடந்த குத்பாவில் எழுப்பிய அதே கேள்வியைத்தான் அவர்களும் எழுப்பியுள்ளார்கள். கொலை செய்தவர்களை அரசாங்கம் கைது செய்த பிறகும் மீண்டும் கேலிச் சித்திரத்தை வெளியிட்டதன் நோக்கமென்ன? பிறகு இவர்கள் மீது வழக்கு தொடரப்படாமலேயே இவர்களில் இருவரை நாடு கடத்தி விட்டார்கள். மேலும் இன்னொருவரை அவர் குற்றவாளி அல்ல என்று அவர்கள் அறிவித்து விடுதலை செய்து விட்டார்கள். ஆக, அங்கு எதுவுமே நடக்கவில்லை என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது.

டிவி சேனல்களிலிருந்து நமது பிரச்சாரகர்களிடம் இன்டர்வியூ எடுக்கப்பட்டிருக்கின்றது. அதில் அவர்களது கருத்துக்களையும் அவர்கள் கூறியுள்ளார்கள். உதாரணமாக, டென்மார்க்கைச் சார்ந்த ஒரு பெண் இந்த நேர்காணல் நடைபெறும் சமயத்தில் மிஷன் ஹவுஸில் இருந்தார்கள். அந்தப் பெண், டிவி பத்திரிகையாளர் முன்பு மிகவும் தெளிவான சொற்களில் இப்படிப்பட்ட கேலிச் சித்திரங்கள் வெளியிடப்படுவதற்கு முன்பு வரை நான் எந்த வெளிநாடுகளுக்குச் சென்றாலும் நான் மிகுந்த மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் நான் டென்மார்க்கைச் சார்ந்தவள் என்று கூறி வந்தேன். ஆனால், இப்போது என்னை நான் டென்மார்க்கைச் சார்ந்தவள் என்று கூறுவதற்கு வெட்கப்படுகிறேன் என்று கூறியுள்ளார். டென்மார்க்கிலிருந்து நான் பெற்ற அறிக்கையின் அடிப்படையில் பலரும் கூறியுள்ள விஷயங்களை நான் உங்கள் முன் வைக்கின்றேன். கார்ட்டூன் மீண்டும் வெளியிடப்பட்டதன் காரணமாக பொதுவாக டென்மார்க்கிலுள்ள பொதுமக்களிடம் நமக்கு சாதகமான சிந்தனை உருவாகி இருக்கின்றது. இதனை அவர்கள் வெளிப்படையாகக் கூறியிருக்கின்றார்கள். பத்திரிகைகளிலும், இன்டர்நெட்டிலும் நமக்கு சாதகமான கருத்துகளும் எதிரான கருத்துகளும் சேர்ந்து வெளியிடப்பட்டு வந்தாலும் இன்டர்நெட்டில் புகழ்பெற்ற ஒரு குரூப்பான Face Book என்ற பெயரையுடைய ஒரு குரூப் Sorry Muhammad என்ற பெயரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக நடந்த தாக்குதல்களுக்காக மன்னிப்புக் கேட்பவர்களின் கருத்துக்களை ஒன்றுசேர்க்க ஆரம்பித்துள்ளார்கள். அதில் இதுவரை 6000 -ற்கும் மேற்பட்ட நபர்கள் தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டிருக்கின்றார்கள். பெரும் எண்ணிக்கையில் மக்கள் இந்த இழிந்த செயல்களுக்காக தமது வருத்தத்தை தெரிவித்துள்ளனர். இதற்கு எதிராக இன்னொரு குரூப் செயல்பட்டு வந்தாலும் அவர்களது எண்ணிக்கை மிகவும் குறைவாகும் என

டென்மார்க்கிலிருந்து எனக்கு கிடைத்த அறிக்கையில் எழுதப்பட்டிருக்கின்றது.

டென்மார்க்கிலுள்ள ஒரு நபர் இவ்வாறு எழுதுகின்றார். டென்மார்க் எங்கே இருக்கின்றது? ஒரு புறம் முஸ்லிம்களுக்கு உதவி செய்கின்றோம் என்ற பெயரில் நாம் ஈராக்கிற்கும், ஆப்கானிஸ்தானிற்கும் நாம் நமது படைகளை அனுப்புகின்றோம். மறுபுறம் இங்கு கேலி சித்திரங்களை வெளியிட்டு முஸ்லிம்களின் உணர்வுகளை காயப்படுத்துகின்றோம். பிறகு இன்னொருவர் இவ்வாறு எழுதியுள்ளார். நான் இந்த நாட்களில் என்னை டென்மார்க்கைச் சார்ந்தவன் என்று கூறிக் கொள்வதில் வெட்கப்படுகின்றேன். இந்த குரூப் -ல் உள்ள பெரும்பாலார் என்னைப் போன்றே உணர்வுள்ளவர்களாக இருப்பதையே நான் உணர்கின்றேன். பிறகு இன்னொருவர் இவ்வாறு எழுதியுள்ளார்.

டென்மார்க்கிலுள்ள பத்திரிகையாளர்கள் கருத்துச் சுதந்திரம் என்பதன் சரியான கருத்தைப் புரிந்தவாறு எதிர்காலத்தில் பேனா, தாள், மை ஆகியவற்றை நன்றாக சிந்தித்தப் பிறகு அவற்றை உபயோகிக்க முன்வருவார்கள் என நான் நம்புகிறேன்.

மிகவும் அதிகமான எண்ணிக்கையில் வெளியிடப்பட்டுள்ள பத்திரிகையான ‘Evident Decay’ தனது பிப்ரவரி 25-ம் தேதி வெளியிட்ட இதழில் இது குறித்து கருத்து வெளியிட்டவாறு இவ்வாறு எழுதுகிறது. அதன் ஆசிரியர் இவ்வாறு எழுதுகின்றார்: முஹம்மத் அவர்களுக்கு எதிராக வெளியிடப்பட்டுள்ள கார்ட்டூன் தொடர்பாக நானும் எனது கருத்தைக் கூற அனுமதி தாருங்கள். எனது கருத்துப்படி இது காட்டுமிராண்டித்தனத்தை வெளிப்படுத்தும் ஒரு தீய செயலாகும். ஒருவர் தனது பக்கத்து வீட்டுக்காரரின் கார்ட்டூனை வரைந்து தனது வீட்டிற்கு முன்பு அதை அவர் பார்க்கும் வகையில் தொங்கவிட்டு விட்டு நான் எனது பக்கத்து வீட்டுக்காரரிடம் நல்ல முறையில் நடந்து கொள்கின்றேன். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரராக இருப்பதால் நான் அவரை நேசிக்கின்றேன் என நயவஞ்சகமாக கூறுவதுபோன்றே இவர்களது இந்த செயல் அமைந்திருக்கின்றது.

பிறகு இன்னொருவர் தமது கருத்தை இவ்வாறு கூறியுள்ளார்: தமது அண்டை வீட்டுக்காரருக்கு துன்பம் தருகின்ற விஷயம் எப்போதும் தீமையானதே ஆகும். இஸ்லாத்திற்கு எதிரான கருத்தைக் கூறுவது சரியானதுதான். ஆனால் இப்படிப்பட்ட கேலிச்சித்திரங்களை வரைவது பிறருக்கு துன்பம் தருவதற்காக செய்யப்பட்ட செயலேயாகும்.

கிரிஸ்டிலிக் டக் பெர்க் என்ற மதப்பத்திரிகையில் டென்மார்க்கைச் சார்ந்த ஒருவரின் கருத்து இவ்வாறு வெளியிடப்பட்டிருக்கின்றது:

மனச்சாட்சி சுதந்திரம் பறிபோகும் அபாயம் முஸ்லிம்களிடமிருந்து நமக்கு இல்லை. மாறாக, Press, Ministers, அரசியல்வாதிகள் ஆகியவரிடமிருந்துதான் இந்த அபாயம் இருக்கின்றது. ஏனென்றால், இவர்கள் இத்தகு செயல்களுக்கான எதிர்நடவடிக்கை என்ற நிலையில் முஸ்லிம் களுக்கு தங்களது கருத்துக்களைக் கூற அனுமதி தருவதில்லை. அதைக் கேட்கவும் அவர்கள் தயாராக இல்லை.

கிறிஸ்தவர்களின் ஒரு அமைப்பின் Working Committee -ன் உறுப்பினராக இருக்கும் ஒருவர் இவ்வாறு எழுதியுள்ளார்:

கார்ட்டூன் வெளியிடப்பட்டிருப்பது கிறிஸ்தவத்தின் போதனைகளுக்கு முற்றிலும் எதிரானதாகும். அப்படிப்பட்ட செயல்களை நாம் முட்டாள்த்தனமான செயல்கள் என்று மட்டுமே கூறுவோம். எவருக்கு அல்லாஹ் ஒரு பதவியை வழங்குகின்றானோ அவருக்கு அதற்கான அறிவையும் வழங்குவான் என்பது டென்மார்க்கில் கூறப்படும் ஒரு சொற்றொடர் ஆகும். இப்படிப்பட்ட செயல்களைப் பார்த்த நமது சான்றோர்களிடம் அறிவு குறைந்து விட்டதை நம்மால் காண முடிகிறது.

இவ்வாறு எண்ணற்ற கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இந்த மேற்கோள்களில் இருந்து இஸ்லாத்திற்கு எதிராக தீட்டப்பட்டுள்ள இழிவான திட்டங்களில் பல நல்லியல்பு கொண்ட மக்கள் பங்குபெறவில்லை என்பது தெரிகிறது. இது இவர்களது ஒரு மிகப்பெரிய சூழ்ச்சியாகும். இதற்கு ஆதரவாக ஒன்றிரண்டு கார்ட்டூன் வரைபவர்கள் அல்லது சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அரசியல் தலைவர்களாக ஆவதற்கு ஆர்வமுடைய சிலர் ஆகியோரது கை மட்டும் இல்லை. மாறாக, இதற்குப் பின்னால் ஒரு மிகப்பெரும் சதி, சூழ்ச்சி இருக்கின்றது. இதற்குப் பின்னால் மிகப்பெரிய சக்திகளின் கைகள் இருக்கின்றன. அவை இஸ்லாமிய போதனைகள் பரவுவதைக் கண்டு அஞ்சுகின்றனர். தமது ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் பொதுமக்கள் இஸ்லாத்தின் போதனைகள் என்ன? என்பதை புரிந்து கொள்ளக்கூடாது என்று அவை விரும்புகின்றன. மார்க்கத்தின் பெயரால் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கே அவை விரும்புகின்றன. அவை 1500 வருடங்களாக இஸ்லாத்தின் மீதுள்ள பழைய பகைமையை வெளிப்படுத்தும் முகமாக பெரும் திட்டங்களைத் தீட்டி செயல்படுகின்றன. நமது அரபிச் சேனல் நிறுத்தப்பட்டதற்குப் பின்னால் கிறிஸ்தவர்களின் மிகப்பெரும் கை தான் செயல்பட்டிருக்கின்றது. அந்தக் கிறிஸ்தவர்கள் பெரும் அரசாங்கங்கள் மூலம் அரபு நாட்டில் உள்ளவர்களுக்கு pressure கொடுத்ததன் விளைவாகத்தான் அவர்கள் நமது சேனலை நிறுத்தினார்கள். அப்படிப்பட்ட மக்கள் இறைவனுக்கு இணை வைப்பதிலிருந்தும் தூய்மைப்படுத்துகின்ற மக்களது இயல்புக்கேற்ற சிறந்த இஸ்லாமிய போதனைகளை எப்படி வளர விடுவார்கள்? இவர்கள் இப்படிப்பட்ட செயல்களை மார்க்கத்தின் போர்வையில் இருந்தபடி செய்தாலும், அரசியல் போர்வையில் இருந்தபடி செய்தாலும் இன்று இவர்கள் உலகின் இலாஹாக (வணக்கத்திற்குரியவனாக) ஆக முயற்சி செய்கின்றார்கள். உலகின் எஜமானர் களாகத் திகழ இவர்கள் முயற்சி செய்கின்றார்கள். உலகின் இறைவன் ஆக இவர்கள் முயற்சி செய்கின்றார்கள். இப்படிப்பட்ட பெரிய மூளையை உடையவர்கள்தான் இஸ்லாத்திற்கு எதிரான சூழ்ச்சியில் ஈடுபட்டு வருகின்றார்கள். இஸ்லாம் பரவி விட்டால் மற்ற மதங்களின் தகுதி சாதாரணமாகத்தான் இருக்கும் என்ற அபாயத்தை இவர்கள் உணர்ந்துள்ளனர். ஆனால், இவை இவர்களது எண்ணங்களேயாகும். இவர்கள் விரும்புவதைச் செய்யட்டும். இஸ்லாம் பரவும் என்பது விதிக்கப்பட்ட தாகும். இன்ஷா அல்லாஹ் நிச்சயமாக அது பரவும். ஆனால் அது படை பலத்தாலோ தீவிரவாதத்தாலோ பரவாது. மாறாக, திருக்குர்ஆனின் அன்பு, நேசம் ஆகியவற்றை பரப்புவதற்காக வழங்கப்பட்டுள்ள போதனைகள் மூலமாகவே அது பரவும். மனிதனின் இயல்புக்கேற்ற மார்க்கத்தை வெளிப்படுத்திக் காட்டுவதன் மூலமாக அது பரவும். இந்த தூதுச் செய்தியை அதிகமாக பரப்புவதற்கு நம்மில் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும்.

ஹாலந்திலுள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனது கட்சியிலிருந்து நீக்கப்பட்ட பிறகு அவர் ஒரு தனிக்கட்சி தொடங்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார். இவர் முஸ்லிம்களுக்கு எதிராகவும் இஸ்லாத்திற்கு எதிராகவும் தீவிரமாக செயல்பட்டு வருபவராவார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக மீண்டும் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார். மிகவும் இழிவான சொற்களில் அவரது இந்த அறிக்கை இருக்கிறது. திருக்குர்ஆன் தொடர்பாகவும் மிகவும் பொருத்தமற்ற இழிவான சொற்கள் அடங்கிய ஒரு அறிக்கையை இவர் வெளியிட்டுள்ளார். இஸ்லாத்தின் பகைமையில் இவர் எந்த அளவு முன்னேறியுள்ளார் என்றால் டென்மார்க் பத்திரிகைகளில் வெளிவந்துள்ள கேலிச் சித்திரத்தை இவர் தனது Web site -ல் பதிந்து வைத்துள்ளார். மேலும் அதனை மிகவும் புகழ்ந்து கூறியுள்ளார். எவ்வாறிருப்பினும், இவரை அல்லாஹ்வே பார்த்துக் கொள்வான்.

திருக்குர்ஆன் தொடர்பாக இவர் இவ்வாறு எழுதியுள்ளார்: திருக்குர்ஆன் தீவிரவாதத்தைப் போதிக்கிறது. எனவே இதை தடை செய்ய வேண்டும். பாதி குர்ஆனை கிழித்து எறிந்து விட

வேண்டும். (நவூதுபில்லாஹ் - அல்லாஹ் காப்பானாக)

இந்த நபர் இப்போது திருக்குர்ஆனுக்கு எதிராக ஒரு Film தயார் செய்து வருகின்றார். இந்த Film ஐ முதலில் வெளியிட அவருக்கு எண்ணம் இருந்தது. ஆனால் அதை அவரால் செய்ய முடியவில்லை. இவரது இந்த முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் அரசாங்கத்திற்கு கடிதங்கள் எழுதியுள்ளன. நமது ஜமாஅத்தும் கடிதம் எழுதியுள்ளது. அந்த Film -ற்கு அவர் ஃபித்னா (குழப்பம்) என்று பெயர் வைத்துள்ளார். இந்த படத்தில் நீங்கள் எதைக் காட்டப்போகின்றீர்கள்? என்று ஒருவர் இவரிடம் கேட்டதற்கு நீங்கள் காஃபிர்களை போரில் எதிர்த்து நிற்கும்போது அவர்களது கழுத்துக்களை வெட்டுங்கள் என்ற குர்ஆனின் கட்டளையைக் காட்டுவேன் என்று அவர் பதில் கூறியுள்ளார். தற்காப்பிற்காகவே இப்படிப்பட்ட போர்கள் நடந்தன. மேலும் இரவு நேரங்களில் ஆப்கானிஸ்தானில் தலைகள் வெட்டப்படும் காட்சியைக் காட்டுவேன் என்றும் அவர் கூறியுள்ளார். இதற்குப் பின்னாலும் ஒரு பெரிய அமைப்பின் கைகள் இருக்கின்றன என்றே தெரிகின்றது.

ஆனால் ஹாலந்திலும் இவரது இந்த முயற்சிக்கு எதிர்நடவடிக்கை எடுக்கும் வகையில் ஜமாஅத்தும் அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியிருக்கின்றது. அங்குள்ள ராணிக்கும் கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. அரசாங்கத்திற்கும் முஸ்லிம் அமைப்புகளுக்கும் இடையில் பல சந்திப்புகள் நடந்துள்ளன. அடித்தளமற்ற இப்படிப்பட்ட தீய செயல்களால் அமைதியான சூழலுள்ள நமது சமுதாயத்தில் இதன் தீய தாக்கம் ஏற்படும் என்று நாம் தெளிவாக கடிதங்களில் குறிப்பிட்டிருந்தோம். அந்தக் கடிதங்களுடன் peace conference ல் நான் நிகழ்த்திய சொற்பொழிவின் எழுத்துப் பிரதியையும் அவர்கள் அனுப்பி வைத்துள்ளார்கள். அதன் காரணமாக அதிகமான எண்ணிக்கையில் நல்ல இயல்புள்ள மக்கள் இதற்கு எதிராக குரல் கொடுத்துள்ளார்கள். Speaker (சபாநாயகர்) அவர்கள் நான் உங்களது கடிதத்தை அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கி விட்டேன் என்று எழுதியுள்ளார். ராணியும் தனது கிறிஸ்துமஸ் தூதுச் செய்தியில் சமுதாயத்தில் அமைதியின்மையைப் பரப்புபவர்கள் பிறரது உள்ளத்தை புண்படுத்தும் வகையிலுள்ள எதிர்மறை அம்சங்கள் அடங்கிய அறிக்கை வெளியிடுவதிலிருந்தும் விலக வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். இந்தப் பணியைச் செய்து வரும் வெல்டர்ஸ் என்ற இந்த பாராளுமன்ற உறுப்பினர் ராணி என்னைக் குறிப்பிட்டுத்தான் இப்படியெல்லாம் செய்தி வெளியிட்டுள்ளார். அரசாங்க விவகாரங்களில் தலையிடுவதை அவர் கைவிட வேண்டும் என்று கூறியுள்ளார். இவர் இவ்வாறெல்லாம் முயற்சிகள் செய்தும் அவற்றை மறுக்கின்ற மக்களையும் அல்லாஹ் அவர்களிலிருந்தே உருவாக்கியுள்ளான். நல்லியல்புள்ள இத்தகைய மக்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் இருக்கின்றனர். இப்படிப்பட்ட நல்ல இயல்பு கொண்ட மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டேயிருக்க அல்லாஹ் உதவி புரிவானாக! இந்த தீய செயல்களிலிருந்து இவர் விலக வேண்டும். இல்லையென்றால், இறைவனின் விதி செயல்படும்போது இப்படிப்பட்டவர்களை அது விட்டு வைக்காது.

கனடா நாட்டைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவப் பிரச்சாரகர் டான் ரிச்சட்ஸன் என்பவர் சில வருடங்களுக்கு முன்னர் திருக்குர்ஆன் மீது தாக்குதல் நடத்தியவாறு The Secrets of Quran என்ற ஒரு நூலை எழுதியுள்ளார். இந்த நூலும் உள்ளத்திலுள்ள காழ்ப்புணர்ச்சி, வெறுப்பு ஆகியவற்றால் நிரம்பியுள்ள ஒரு நூலாகும். திருக்குர்ஆனிலுள்ள பல்வேறு வசனங்களை எழுதி அதுபற்றிய தனது கருத்தையும் இவர் எழுதியுள்ளார். ஒவ்வொரு இடத்திலிருந்தும் சில வசனங்களை தேர்ந்தெடுத்து அதை எழுதி விட்டு அதற்கான ஆங்கில மொழிபெயர்ப்பை பல்வேறு மொழிபெயர்ப்புகளிலிருந்தும் எடுத்து அந்த வசனங்களின் பொருளாக அந்நூலில் இடம் பெறச் செய்துள்ளார். இவ்வாறு ஒரு வசனத்திற்கு 7 அல்லது 8 ஆங்கில மொழிபெயர்ப்புகளை அவர் தனது நூலில் எழுதியுள்ளார். சவுத்ரி

ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்களின் திருக்குர்ஆன் மொழியாக்கத்திலிருந்தும் சில பகுதிகளை இவர் தமது நூலில் இடம்பெறச் செய்துள்ளார். சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்களது மொழியாக்கத்தை ஆட்சேபனை செய்தவாறு அவர் இவ்வாறு எழுதுகின்றார்:

பைபிளைப் பின்பற்றுபவர்களுக்கு புரியும் வகையில் அரபியில் உள்ளவற்றை ஆங்கிலத்தில் (சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப்) எழுதியுள்ளார். ஆனால் தாலூத் என்ற ஒரு பெயரை மட்டும் அரபியிலேயே எழுதியுள்ளார். முஹம்மதின் தவறுகளை அரபி அல்லாதவர்களிடமிருந்து மறைப்பதற்காகவே இவர் இவ்வாறு செய்துள்ளார்.

இவர் கூறுவது தவறு. இது நமது மொழியாக்கத்தின் ஒரு வழிமுறையாகும். இவர் நேர்மையான ஒரு மனிதராக இருந்தால், Five Volume Commentary -ல் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடிக்குறிப்புகளையும் பார்த்திருக்க வேண்டும். சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்களின் மொழியாக்கத்தை என்னால் பார்க்க முடியவில்லை. ஆனால் Commentary -ல் இவர் குறிப்பிடுகின்ற சூரா பக்கராவின் இந்த வசனத்தில் தாவூது நபி தொடர்பாக கூறப்பட்ட இடத்தில் அந்த வசனத்திற்கு கீழே உள்ள அடிக்குறிப்பில் பைபிளில் வரும் அதே சொற்கள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

பிறகு அதே புத்தகத்தில் அவர் இவ்வாறும் எழுதியுள்ளார்: சுதந்திரமாகக் கருத்தைக் கூற விரும்புகின்ற அமெரிக்கர்கள் பலரும் 1.3 பில்லியன் முஸ்லிம்கள் திருக்குர்ஆன் மீது நம்பிக்கை வைத்திருப்பதால் அதிலுள்ள விஷயங்கள் சரியானதும் உண்மையானதுமாகும் என்று கருதுகிறார்கள். இது அந்த அமெரிக்கர்களின் மறதியாகும். இஸ்லாத்திலும் திருக்குர்ஆனிலும் எந்த உண்மையும் இல்லை.

பிறகு அதிபர் புஷ் தொடர்பாக கருத்துக் கூறியவாறு இவர் இவ்வாறு எழுதியுள்ளார்: அதிபர் புஷ் நல்ல மனிதராவார். ஆனால் மேற்கத்திய நாடுகளில் உள்ள பலரையும் போன்றே இவரும் இஸ்லாத்தைப் பற்றி அறிவில்லாதவராக இருக்கின்றார். ஏனென்றால், எல்லாரது முன்னிலையிலும் தீவிரவாதத்திற்கு எதிராக செய்யப்படும் போரிற்கு அவர் Crusade (சிலுவைப்போர்) என்ற பெயரை வைத்துள்ளார். இது அவரது அப்பாவித்தனமாகும். அவரது எந்த ஆலோசகரும் அவருக்கு இதைப்பற்றி ஆலோசனை வழங்கவில்லை.

பிறகு அவர் கூறியிருப்பதன் சுருக்கமான கருத்து என்னவென்றால், அவர் இப்படிப்பட்ட போர்கள் பற்றி Crusade (சிலுவைப்போர்) என்ற கருத்தைக் கூறட்டும். ஆனால் எல்லாருக்கும் தெரியும் வகையில் அதை கூறியிருக்கக் கூடாது. ஏனென்றால், இதனால் கிறிஸ்தவத்தின் மீது தீய தாக்கம் ஏற்பட்டு விடும். ஆக இந்த அளவு இவர்களது உள்ளத்தில் இஸ்லாத்திற்கு எதிராகவும் திருக்குர்ஆனுக்கு எதிராகவும் காழ்ப்புணர்ச்சியும் வெறுப்பும் நிரம்பியிருக்கிறது. ஆனால் இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் எதிரிகள் ஒன்றை நினைவில் வைக்க வேண்டும். இந்தப் போதனைகள் தொர்பாகவே அல்லாஹ் திருக்குர்ஆனில் இறுதியில் இதுவே வெற்றி பெறும் என்று கூறியுள்ளான். இன்ஷா அல்லாஹ் இது இறைவனின் விதியாகும். இதனை இவர்களது ஏமாற்று வேலைகள் அல்லது இவர்களது செல்வங்கள் அல்லது சக்திகள் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் வெளிப்படையில் தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக்கொள்கின்ற முஸ்லிம் அரசாங்கங்கள் மீது நாம் வேதனைப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். தங்களது வெளிப்படையான பொலிவு, மகிமை காரணமாக தெரிந்தோ தெரியாமலோ தங்களது நோக்கத்தை மறந்து தங்களது செயல்களால் இஸ்லாத்தை பலவீனமான ஒன்றாக ஆக்கி விட்டார்கள். தங்களது வெளிப்படையான பொலிவு மகிமை ஆகியவை நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக இவர்கள் இவ்வாறு செய்கின்றார்கள். ஒரு அமெரிக்கர் இது தொடர்பாக தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்டுள்ள விஷயம் என்னவென்றால் இப்போது என்ன நடந்து கொண்டிருக்கின்றதோ இதன் பின்னணியில் இஸ்லாமிய

நாடுகளிலுள்ள பெரும் முஸ்லிம் தலைவர்களின் கையும் செயல்பட்டுள்ளது என்பதாகும். முஸ்லிம் நாடுகளில் உள்ள செல்வங்கள் மேற்கத்திய சக்திகளின் கைகளில் வந்துவிட வேண்டும் என்பதற்காகவே இவர்கள் இவ்வாறு செயல்படுகின்றார்கள். மேலும் இதன் மூலமாக இந்த மேற்கத்திய சக்திகளிடமிருந்து பெறப்பட்ட இந்த செல்வங்களில் இருந்து முஸ்லிம் அரசாங்கங்களும் தங்களது பங்கைப் பெற்றுக் கொள்ளலாம். அதாவது, பொதுமக்களுக்கு இதுபற்றி எதுவும் தெரியாத நிலையில் அந்த சில அரசியல் தலைவர்கள் தங்கள் பங்கைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதுவே இவர்களது சூழ்ச்சியாகும்.

ஆட்சேபனைகளை தேடுவதற்காகவே திருக்குர்ஆனைத் திறந்து படிப்பவர்களது உள்ளங்கள் வெறுப்பாலும் காழ்ப்புணர்ச்சியாலும் நிரம்பி இருப்பதால் அந்த உள்ளங்கள் கற்களை விட கடினமானதாகி விட்டன. அவர்களுக்கு திருக்குர்ஆனின் போதனைகள் எந்த பலனையும் தர முடியாது. அழுக்குகளில் இருப்பதில் பிடிவாதமாக இருப்பவர்கள் இந்த தூய நீரூற்றிலிருந்து எப்படி பலன்பெற முடியும்? திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

நிச்சயமாக இது கண்ணியமிக்க குர்ஆனாகும். இது மறைவான நூலில் பாதுகாக்கப் பட்டுள்ளது. தூய்மையாக்கப்படுபவர்களைத் தவிர வேறு எவராலும் அதைத் தொட முடியாது. (56:78,79,80)

இந்த வசனங்களுக்கு முன்னர் அல்லாஹ் கூறுகின்றான். நான் நட்சத்திரங்களின் நிலைகளைச் சான்றாகக் காட்டுகிறேன். (56:76)

இந்த வசனத்தையும் சேர்த்து நாம் தற்போது கூறிய வசனங்களுக்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நான் நட்சத்திரங்களின் நிலைகள் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். நீங்கள் அறிந்திருப்பின் இது மிகப்பெரும் ஆணையிடுதல் ஆகும் என்று அல்லாஹ் கூறுகின்றான். இந்தத் திருக்குர்ஆன் மகத்தான வேதமாகும் என்ற விஷயத்திற்கே அல்லாஹ் ஆணையிட்டுக் கூறுகின்றான். இதன் போதனைகள் அல்லாஹ்வின் நடைமுறைக்கு மாற்றமானதல்ல. ஏனென்றால் இதன் போதனைகள் மறைவான ஒரு நூலில் அதாவது மனிதனின் இயல்புகளில் எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனின் இயல்பிலும் அதன் போதனைகள் மறைந்துள்ளன. இதன் நுட்பமான ஞானங்களை தூய்மையான உள்ளங்களை உடையவர்களால்தான் புரிந்து கொள்ள முடியும். இந்த இடத்தில் அல்லாஹ் நட்சத்திரங்களின் நிலைகள் மீது ஆணையிட்டுச் சுட்டிக்காட்டுவது என்னவென்றால் எவ்வாறு உண்மையில் பெரிதாக இருக்கும் நட்சத்திரங்கள் மிகவும் உயரத்தில் இருக்கும் காரணத்தால் புள்ளிகள் போன்று தென்படுகின்றதோ அவ்வாறே திருக்குர்ஆனும் அதன் தகுதிகள் உயரத்திலும் மகிமையிலும் மிக உயர்ந்த நிலையில் இருப்பதால் குறைவான பார்வையுடைய கண்களுக்கு மறைவாக இருக்கின்றது. எவர்களது கண்களில் உள்ள தூசிகள் அகன்று விடுகிறதோ அவர்களால்தான் அதைப் பார்க்க முடியும். அல்லாஹ் இந்த வசனத்தில் திருக்குர்ஆனிலுள்ள உயர்வான நுட்பமான ஞானங்களைச் சுட்டிக் காட்டியவாறு அவை இறைவனின் பார்வையில் சிறப்பிற்குரிய சில அடியார்களுக்குத்தான் திறந்து தரப்படுவதாகக் கூறியுள்ளான். அவர்களை அல்லாஹ் தனது கைகளால் தூய்மைப்படுத்துகின்றான். திருக்குர்ஆனின் நுட்பமான ஞானங்கள் இறைவனின் பார்வையில் சிறப்பினைப் பெற்ற சில அடியார்களுக்கு மட்டும்தான் வழங்கப்படும் போது மற்றவர்கள் அதன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் இருந்தால் அவர்களது நிலை என்ன? என்ற ஆட்சேபனையை எவரும் செய்ய முடியாது. ஏனென்றால் ஈமானுக்கு அடிப்படையாகத் தேவைப்படும் எல்லா விஷயங்களும் சாதாரணமாக எல்லாரும் புரிந்து கொள்ளும் அளவில்தான் திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கின்றது. அதனை ஒரு காஃபிராலும் புரிந்து கொள்ள முடியும்.

ஆக, நுட்பமான ஆழமான ஞானங்களும் திருக்குர்ஆனில் இருக்கின்றது. பொதுவாக எல்லாரும் புரிந்து கொள்ளத்தக்க விஷயங்களும் திருக்குர்ஆனில் இருக்கின்றது. புரிய விரும்புபவர்களால் அதை புரிந்து கொள்ள முடியும். அதை படிக்கின்ற ஒருவருக்கு அது மறைவாக இல்லை. அது பொதுவாக எல்லாராலும் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாக இருந்தால் தப்லீகின் பணிகள் குறைவுள்ளதாக ஆகி விடும். ஆனால் திருக்குர்ஆனில் உள்ள ஆழமான இறைஞானம் மிக்க நுட்பமான விஷயங்கள் ஈமானின் அடித்தளத்திற்குத் தேவைப்படும் அடிப்படை விஷயங்களாக இல்லாமல் இருப்பதால் அவை இறைஞானத்தை அதிகப்படுத்துவதற்கு மட்டும் இருப்பதால் அவை தொடர்பாக இறைவனது பார்வையில் சிறப்பிற்குரிய அடியார்களாக இருப்பவர்களுக்கே அதன் வழிகள் காட்டப்படுகின்றன. ஏனென்றால் அவை இறைவனால் வழங்கப்படும் ஆன்மீக அருட்கொடைகள் ஆகும். அவை முழுமை பெற்ற ஈமானை உடையவர்களுக்கு கிடைக்கின்றன.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உலக அறிவின் நுட்பமான விஷயங்களை தெரிந்து கொள்வதற்கு இறையச்சமும் தூய்மையும் அவசியமானதல்ல. குழப்பவாதியாகவும் தீயவராகவும் அநீதியிழைப்பவராகவும் இருக்கின்ற மிகவும் கெட்ட மனிதன் கூட அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். தெரு பெருக்குபவர்கள் கூட பட்டப்படிப்பு படித்து பட்டம் பெற்று விடுகின்றார்கள். ஆனால் மார்க்க அறிவு என்பது எல்லாராலும் பெறப்படக்கூடிய ஒன்றல்ல. அதைப் பெற்றுக் கொள்வதற்கு இறையச்சமும் தூய்மையும் அவசியமானதாகும். இதைப் பற்றி இறைவன் தூய்மையாக்கப்பட்டவர் களைத் தவிர வேறு எவராலும் திருக்குர்ஆனைத் தொட முடியாது என்று கூறுகின்றான். எனவே மார்க்க அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு இறையச்சத்தில் முன்னேற வேண்டியது அவசியமாகும். எந்த அளவுக்கு இதில் அவர் முன்னேறுவாரோ அந்த அளவு நுட்பமான உண்மைகளும் ஞானங்களும் அவருக்கு திறந்து கொடுக்கப்படும்.

எனவே, தூரத்தில் நின்றவாறு எவர் திருக்குர்ஆனின் போதனைகளைப் பார்க்கின்றாரோ அவர் தமது காழ்ப்புணர்ச்சி, வெறுப்பு ஆகியவற்றின் காரணமாக அதன் அருகில் வந்து பார்க்காமல் மற்றவர்களையும் அந்த போதனைகளுக்கு எதிராக தூண்டுபவராக இருந்தால் ஷய்த்தானின் வழிகளை பின்பற்றுபவராக இருந்தால் அவர் திருக்குர்ஆனை புரிந்து கொள்ள முடியாது. அதைப் புரிவதற்கு தூய உள்ளம் தேவைப்படுகிறது. எனவே, அதிகமாக இறை ஞானங்கள் கிடைப்பதற்கு அதிகமாக இறையச்சத்தில் முன்னேற வேண்டியது அவசியமாகும். எனவே, திருக்குர்ஆனை புரிவதற்குரிய அளவுகோல் இதுவே யாகும்.

நான் ஒரு பெண்ணைப் பற்றி கூறியிருந்தேன். அவர் திருக்குர்ஆனின் மொழியாக்கத்தைப் படித்துப் பார்த்து விட்டு முஸ்லிமாகி விட்டார். அவர் எந்த மொழியாக்கத்தைப் படித்தார். எந்த அளவுக்கு அது சரியாக இருந்தது என்பது வேறு விஷயம். ஆனால் அது அவர்களது உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. தூய உள்ளத்துடன் திருக்குர்ஆனிலுள்ள முத்துக்களைத் தேடியவாறு அதை அதற்கு அருகில் வந்து பார்க்க வேண்டும். ஆனால், நான் குறிப்பிட்ட பாதிரியைப் போன்று ஆட்சேபனைகளை செய்வதற்காக மட்டும் அதைப் பார்ப்பதாக இருந்தால் பிறகு அவருக்கு எதுவும் தெரியாது. நட்சத்திரங்களை மிகத் தொலைவில் கண்டு விட்டு அவற்றை மின்னுகின்ற புள்ளிகளாக மட்டும் காண்கின்ற அறிவற்றவரைப்போன்றே அவர் இருக்கின்றார். அப்படிப்பட்ட காழ்ப்புணர்ச்சியும் வெறுப்பும் கொண்ட மக்களுக்கு திருக்குர்ஆனின் போதனைகள் அவர்களுக்கு நஷ்டத்தைத்தான் அதிகரிக்கச் செய்யும் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஆனால் நம்பிக்கையாளர் களுக்குத்தான் அதில் குணமளிக்கும் தன்மை இருக்கின்றது. இதைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில்

இவ்வாறு கூறுகின்றான்.

*நம்பிக்கையாளர்களுக்கு குணமளிப்பதாகவும் அருளாகவும் அநீதியிழைப்பவர்களுக்கு நஷ்டத்தை அதிகரிக்கக் கூடியதாகவும் திருக்குர்ஆனில் இருந்து (படிப்படியாக போதனைகளை) இறக்கிக் கொண்டிருக்கிறோம். (17:83)*

எனவே திருக்குர்ஆனுக்கு எதிரான கருத்துக்களை நாம் கேட்கும்போது (அந்த ஆட்சேபனையின் ஆழிய ஞானம் மூமின்களாகிய நமக்கு மட்டுமே தெரிவதால்) அவை நமது ஈமானுக்கு மேலும் வலுவூட்டக்கூடியதாகத்தான் அமையும் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட எதிர் கருத்துக்களை கூறுபவர்கள் ஷய்த்தானின் அடிமைகளாக இருப்பதால் அவர்களால் வழிகெடுப்பதை தவிர வேறு எதையும் செய்ய முடியவில்லை. இவர்கள் எதிர்ப்பதில் எந்த அளவு குருடர்களாக ஆகி விட்டார்கள் என்றால் வெளிப்படையாக பார்க்கும்போது முன்னேற்றமடைந்துள்ள நகரங்களில் வசிப்பவர்களாகவும், படித்த மேதைகளாகவும் மார்க்க வழிகாட்டிகளாகவும், அமைதியை நிலைநாட்டுபவர்களாகவும் மக்களது கண்களுக்கு தென்பட்டாலும்கூட இவர்களது வெளிப்படையான நிலைமை ஏமாற்றுவதற்குள்ள வழி மட்டும்தான் என்பது இவர்களது சில செயல்களால் வெளிப்பட்டு விடும். இவர்களே நோயாளிகள். இவர்களது நோய் வளர்ந்து கொண்டேயிருக்கும். இவர்கள் மனிதர்களுக்கு அருட்கொடையாக வந்தவரின் போதனைகளிலிருந்து ஒருபோதும் அருள்களைப் பெற முடியாது. அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

*எவ்வாறெனில், பிரிக்கப்பட்டவர்களுக்கு நாம் (தண்டனை) இறக்கினோம். அவர்கள் திருக்குர்ஆனை பொய்யான விஷயங்களின் தொகுப்பு என்று கூறினார்கள். எனவே, உம் இறைவன் மீது ஆணையாக! இவர்கள் எல்லாரிடமும் நிச்சயமாக (இதுபற்றி) கேட்போம். அவர்கள் செய்து கொண்டிருந்த செயல்களைக் குறித்து (கணக்குக் கேட்போம்) (15:91-94)*

எனவே, இந்த விதிமுறை மக்காவாசிகளுக்கு மட்டும் உரியதல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா காலத்திற்குமுரியவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு துன்பங்கள் தரக்கூடியவர்களுக்கு அல்லாஹ்வின் இந்த பரிமாற்றம் எப்போதும் இருந்து வரும். இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை, நவூதுபில்லாஹ் பரிகாசம் செய்பவர்கள் அல்லது திருக்குர்ஆனின் போதனைகளை பொய் என்று கூறுபவர்கள் அல்லாஹ்வின் பிடியிலிருந்து தப்பி விடுவார்களா? அல்லாஹ் தனது நேசத்திற்குரியவர்கள் மீது தனது தன்மான உணர்வை வெளிப்படுத்தியவாறு எப்போதும் அதை வெளிப்படுத்திக் காட்டுவான். இன்னும் எதிரிகளின் இந்த பிரிவினர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக தங்களது பணிகளை பிரித்துப் பங்கிட்டு வைத்துள்ளார்கள். இதைப்பற்றிதான் அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான். இதன் மூலமாக அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் திருக்குர்ஆனையும் இழிவுபடுத்த முயற்சிகளைச் செய்கின்றனர். நூல்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும், டிவி நிகழ்ச்சிகள் மூலமாகவும், திரைப்படங்கள் மூலமாகவும் இந்த முயற்சிகள் செய்யப்படுகின்றன. எனவே, இவர்கள் தங்கள் பணிகளைப் பங்கிட்டு வைத்துள்ளனர். நவூதுபில்லாஹ் திருக்குர்ஆனின் போதனைகள் பொய்யானவை என்று இவர்கள் கூறுகின்றார்கள். கனடாவிலுள்ள பாதிரியும் தனது நூலில் இதை நிரூபிக்கத்தான் முயற்சி செய்துள்ளார். இந்த செயல்களின் காரணமாக உங்களை பிடிக்காமல் நான் விட்டு விடுவேன் என ஒருபோதும் நீங்கள் கருத வேண்டாம். இதற்காக நீங்கள் பதில் கூற வேண்டியது வரும். தண்டனையைப் பெறத் தயாராக இருக்க வேண்டும் என்று அல்லாஹ் கூறுகின்றான். உங்களது நிலைமையில் நீங்கள் மாற்றத்தை ஏற்படுத்த வில்லையென்றால், நிச்சயமாக இறை தண்டனை உங்களைப் பிடிக்கும். இந்த தண்டனையை அல்லாஹ் எப்படி இறக்குவான்? அவன் எஜமானனாக இருக்கின்றான். அவன் எந்த

வழியில் விரும்புகின்றானோ அந்த வழியில் இறை தண்டனையை இறக்குவான். ஆனால், அவன் தனது நேசத்திற்குரியவர்களுக்காக தனது தன்மான உணர்வை வெளிப்படுத்திக் காட்டுவான் என்பது அடிப்படையான விஷயமாக இருக்கின்றது. தனது ஷரீஅத்தின் மீதும் அவனுக்குத் தன்மான உணர்வு இருக்கின்றது. அதை அவன் வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். எனவே, இவர்களது செயல்களின் காரணமாக தண்டனை கொடுக்காமல் அல்லாஹ் இவர்களை ஒருபோதும் விடமாட்டான். இறைவனது நேரம் வரும்போது எந்தப் பொய்த்தெய்வங்களாலும் இவர்களைக் காப்பாற்ற முடியாது. அல்லாஹ் திருக்குர்ஆனில் மக்களுக்கு போதனை செய்யும்படி மீண்டும் மீண்டும் கவனமூட்டுகின்றான். இந்த குர்ஆன் இறுதியான ஷரீஅத்தையுடைய வேதமாகும். இந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் ஷரீஅத்தைக் கொண்டு வந்துள்ள நபிமார்களில் இறுதியானவராக இருக்கின்றார் என அல்லாஹ் மீண்டும் மீண்டும் அறிவிப்புச் செய்துள்ளான். கடந்தகால நபிமார்களின் போதனைகளில் உள்ள முக்கியமான பகுதிகள் திருக்குர்ஆனில் இடம் பெற்றுள்ளன. மாறாக, இதற்கு முன்னுள்ள வேதங்களில் கூறப்படாத பல விஷயங்களும்கூட திருக்குர்ஆனில் இடம்பெற்றுள்ளன. இவ்வாறிருந்தும் உங்களுக்கு அறிவில்லையா? இதை சிந்தித்தவாறு உங்களது உள்ளங்களை தூய்மைப்படுத்துங்கள். 1.3 பில்லியன் முஸ்லிம்களைப் பார்த்து விட்டு திருக்குர்ஆனின் போதனைகள் உண்மையானவை என்று ஒருபோதும் கருதி விடாதீர்கள் என்று கூறுவதற்குப் பதிலாக திருக்குர்ஆனின் ஆழமான ஞானங்களைக் கவனத்துடன் சிந்தனை செய்து பாருங்கள். இந்த வேதம் மட்டும்தான் அதன் அசல் வடிவத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் இதை பாதுகாப்பதாக வாக்குறுதியளித்துள்ளான். கடந்த சில நாட்களுக்கு முன் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கின்றது. சில இடங்களில் சிலர் ஒரு புதிய ஆய்வை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் திருக்குர்ஆன் அதன் அசல் வடிவத்தில் பாதுகாப்பாக இல்லை என்பதை இவர்கள் நிரூபிக்க முயற்சி செய்து வருகின்றார்கள். இவர்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் அல்லாஹ்வின் வாக்குறுதியை இவர்கள் ஒருபோதும் பொய்யாக்க முடியாது. எனவே, தவறான வழியில் செல்வதற்குப் பதிலாக நேரான வழியை சிந்தனை செய்து பாருங்கள். நான் கூறியுள்ள அறிவுரையைச் சிந்தித்துப் பாருங்கள்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

*நிச்சயமாக நாம் குர்ஆனை (நீங்கள் அறிந்து) நினைவு கூர்ந்து அறிவுரையைப் பெறும் பொருட்டு எளிதாக ஆக்கியுள்ளோம். எனவே, அறிவுரையைப் பெறுபவர் எவரேனும் உண்டா? (54:41)*

இந்த வசனம் அல்கமர் என்ற அதிகாரத்தில் வந்துள்ளது. அந்த அதிகாரத்தில் நான்கு முறை இந்த வசனம் இடம்பெற்றிருக்கிறது. ஒவ்வொரு முறை இந்த வசனம் கூறப்பட்ட பிறகு ஏதாவது ஒரு சமுதாயத்தின் அழிவு பற்றி அதில் கூறப்பட்டிருக்கின்றது. முதலில் ஆது சமுதாயத்தின் உதாரணம் கூறப்பட்டுள்ளது. இரண்டவதாக, ஸமூது சமுதாயத்தின் உதாரணம் கூறப்பட்டிருக்கிறது. பிறகு ஃபிர்அவ்னின் சமுதாயத்தின் உதாரணம் கூறப்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லாரும் நபிமார்களை மறுத்தனர். அவர்களைப் பொய்யாக்கினர். இறுதியில் இறைவனது பிடியில் வந்து விட்டார்கள். அல்லாஹ்வின் கருணைமிக்க பார்வையிலிருந்து கொண்டே உங்களுக்கு உரிமையில்லாத விதத்தில் பலன்பெற்றவாறு வரம்பு மீறி செயல்படாதீர்கள். இவ்வாறு வரம்பு மீறி செயல்படுவது அல்லாஹ்வின் கோபத்தை தூண்டிவிடும். எனவே, இறைவனுக்கு அஞ்சுங்கள். திருக்குர்ஆனின் போதனைகளை உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவற்றை ஆட்சேபனை செய்வதற்குப் பதிலாக உங்களது அறிவை நினைத்து அழுங்கள். திருக்குர்ஆனின் போதனைகள் மனிதனின் இயல்புக்கு முற்றிலும் பொருந்தக் கூடியவையாக உள்ளன. அதனைப் புரிவதற்குத் தூய்மையான உள்ளம் தேவை. உங்களைத் தூய்மைப்படுத்தக்கூடிய ஒருவரும் தேவை. இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் தான் திருக்குர்ஆனின் ஞானங்களைப் புரிந்து அதை மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறி

வருகிறது. இந்த ஜமாஅத்திற்கு வந்து அதன் ஞானங்களை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ் இந்த மக்களுக்கு அறிவை வழங்கி அல்லாஹ் எச்சரித்துள்ள அந்த முடிவிலிருந்தும் இவர்களை பாதுகாப்பானாக! ஆமீன்.

இன்றைய நாட்களில் அதிகமாக துஆ செய்ய வேண்டியது அவசியமாகும். முஸ்லிம் உம்மத்திற்காகவும் துஆ செய்ய வேண்டும். இவர்கள் காழ்ப்புணர்ச்சியை கைவிட்டு விட்டு ஒரு பெரும் நோக்கத்தில் வெற்றியைப் பெறுவதற்கு ஒரே அணியின் கீழ் ஒற்றுமையாக செயல்பட்டால், அல்லாஹ் சுட்டிக்காட்டியதைப் புரிந்து கொண்டால் எல்லா தீங்குகளிலிருந்தும் அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள். இதுதான் இந்த தீய தாக்குதல் நடத்துபவர்களின் தாக்குதல்களிலிருந்தும் இவர்களைப் பாதுகாக்கும். அல்லாஹ் இவர்களைப் பாதுகாப்பானாக.

ஒரு வேதனை நிறைந்த செய்தியை நான் கூற விரும்புகின்றேன். மதிப்பிற்குரிய பஷாரத் அஹ்மத் சாஹிப் முகல் அவர்கள் ஷஹீதாக்கப் பட்டுள்ளார்கள். பாகிஸ்தானிலுள்ள கராச்சியில் இவர் இருந்து வந்தார். பிப்ரவரி 24 ம் தேதி சிலர் இவரை சுட்டு ஷஹீதாக்கி விட்டார்கள். இவருக்கு வயது 50. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். காலை 6.00 மணிக்கு இவர் சுபுஹ் தொழுகையை நிறைவேற்ற சென்று கொண்டிருந்தார். ஆனால், அவர் பள்ளிவாசலை சென்றடைய வில்லை. சிறிது நேரம் கழிந்த பிறகு அவருடைய மகன் வந்து எனது தந்தையை யாரோ சுட்டு ஷஹீதாக்கி விட்டார்கள் என்று கூறியுள்ளார். அங்கு தெருவை சுத்தம் செய்யக்கூடியவர்கள் கூறியது மோட்டார் சைக்கிளில் சிலர் வந்தார்கள். Fire செய்து அவரை ஷஹீதாக்கி விட்டார்கள் என்ற செய்தியேயாகும். நான்கு அல்லது ஐந்து குண்டுகள் இவர் மீது பாய்ந்தன. ஒரு குண்டு கையில் பட்டது. நெஞ்சில் ஒரு குண்டு பாய்ந்தது. மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே இவர் ஷஹீதாகி விட்டார்.

மர்ஹூம் 1988 -ல் பைஅத் செய்து தனது குடும்பத்துடன் ஜமாஅத்தில் இணைந்தார். கராச்சியில் பணிபுரிந்து வந்தார். மிகவும் தைரியமிக்க மனிதராவார். மக்களுக்கு எல்லா நேரமும் உதவி செய்பவர். தொழுகைகளை முறையாகப் பேணுபவர். மக்களை தொழுகைக்காக கொண்டு செல்பவராக அவர் இருந்தார். தொழுகைக்காக செல்லும்போது ஒவ்வொருவரது வீட்டுக் கதவையும் அவர் தட்டுவார். தொழுகைக்காக செல்லும்போது இவ்வாறு கதவைத் தட்டி அனைவரையும் எழுப்புவார். இவர் மிகவும் முயற்சி செய்து மன்சூர் காலனியில் ஒரு அழகிய பள்ளிவாசலைக் கட்டியுள்ளார். வஸிய்யத் செய்தவர். இவருக்கு மனைவியைத் தவிர இரண்டு மகள்களும் ஐந்து மகன்களும் இருக்கின்றார்கள். ரப்வாவில் இவருக்கு ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டு அங்கேயே இவர் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். அல்லாஹ் இவர்களது தகுதியை உயர்த்து வானாக. இவரது மனைவி மக்களுக்கு பொறுமையை கடைபிடிப்பதற்கான தவ்ஃபீகை வழங்குவானாக. அவரது நல்ல முன்மாதிரியை தொடர்ந்து நிலைபெறச் செய்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக. இந்த எதிரிகளை தனது பிடியின்கீழ் கொண்டு வருவனாக.

இரண்டாவது குத்பாவில் ஹுஸூர் அவர்கள் ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு ஷஹீதாக்கப்பட்ட மர்ஹூமின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.


| JUMUA KUTHBA<br>*HADHRAT KHALIFATUL MASIH V*<br>AT BAITUL FUTUH, LONDON<br>ON 29.02.2008 | Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**<br>Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**<br>ASHURA EAST STREET, MELAPALAYAM,<br>TIRUNELVELI – 627 005.<br>**TELEFAX : 0462 - 2352456** |
|---|---|